தினமணி

**விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

First Published : 17 Aug 2010 01:09:52 PM IST

அரியலுர், ஆக. 16: பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வைக் கட்டுப்படுத்த வலியுறுத்தியும், இலவச வீட்டுமனைப்பட்டா, இலவச நிலம் வழங்கக் கோரி கேட்டு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அரியலூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு அரியலூர் மாவட்டத் துணைத் தலைவர் பி. பிச்சைப்பிள்ளை தலைமை வகித்தார். மகளிர் சங்க நிர்வாகிகள் வி. அஞ்சலை, இ. கங்கா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் என். செல்லதுரை, மாவட்ட துணைச் செயலர் ஏ.கே. ராஜேந்திரன், மாவட்டத் தலைவர் கே. மகாராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர்.

அரியலூரில் கடந்த 4 ஆண்டுகளாக அமைக்கப்பட்டு வரும் ரயில்வே மேம்பாலத்தை உடனடியாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், சிங்காரத்தெரு மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தர வேண்டும், அரியலூர் அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**பச்சை தேயிலைக்கு விலை குறைத்ததை கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 17 Aug 2010 12:30:46 PM IST

Last Updated : 17 Aug 2010 03:41:20 PM IST

கூடலூர், ஆக. 16: பந்தலூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாகம் ஜூலையில் பச்சை தேயிலையின் விலையை குறைத்ததை கண்டித்து திங்கள்கிழமை பந்தலூரில் தேயிலை விவசாயிகள் கண்டனப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜூலையில் விலையை மறு நிர்ணயம் செய்து பிடித்தம் செய்த பணத்தை திருப்பித் தர வேண்டும். அங்கத்தினர்கள் விநியோகம் செய்யும் தேயிலையில் தரமான தூள் உற்பத்தி செய்ய தயாரிப்பாளரை உடனடியாக நியமனம் செய்ய வேண்டும். ஒழுங்கு நடவடிக்கைக்குட்படும்

ஊழியர்களை இத்தொழிற்சாலையில் பணியமர்த்த கூடாது.விவசாயிகள் உற்பத்தி செய்யும் அனைத்து பச்சை தேயிலையையும் கொள்முதல் செய்யும் அளவிற்கு உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும.

உற்பத்தி செலவை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு கொள்கைப்படி மக்களாட்சி முறையில் நிர்வாகத்தை செயல்படுத்த சிறப்பு மகா சபை யை கூட்ட வேண்டும்.

தற்போது தொழிற்சாலையில் இருப்பு உள்ள பொருட்களை நேர்மையான அலுவலர்களை கொண்டு அங்கத்தினர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் சரிபார்க்க வேண்டும் என வலியுறுத்தி பந்தலூரின் முக்கிய வீதிகள் வழியாக தேயிலை விவசாயிகள் பேரணியாக வந்து தொழிற்சாலை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இந்த போராட்டத்திற்கு கூட்டு குழுவின் அமைப்பாளர் ஏ.வி.மத்தாய் மாஸ்டர் தலைமை வகித்தார். இணை அமைப்பாளர் க.விஜயகுமார், அப்துல் ரகுமான், சண்முகன், வி.டி.எம்.எஸ்.செல்வராஜ் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

**வேளாண் தனி அலுவலர் பணியிடை நீக்கம்**

First Published : 17 Aug 2010 01:11:10 PM IST

கரூர், ஆக.16: கரூரில் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரம் டிஎன்பிஎல் நிறுவனத்திற்கு முறைகேடாக விற்கப்பட்டது தொடர்பாக வேளாண் துறை தனி அலுவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கரூர் மாவட்ட வேளாண் துறையின் கீழ் "அக்ரோ சர்வீஸ் சென்டர்' தாந்தோன்றி மலையில் செயல்படுகிறது. இந்த மையம் விவசாயிகளுக்குத் தேவையான டிராக்டர், களைக் கொத்தி, மருந்துத் தெளிப்பான் உள்ளிட்ட வேளாண் கருவிகளை வாடகைக்கு விடும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இதன் தனி அலுவலர் பி. செல்லமுத்து.

இந்நிலையில், திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற அதிமுக ஆர்ப்பாட்டத்தில்
பேசிய பொதுச் செயலர் ஜெயலலிதா, கரூர் மாவட்டத்தில் செயல்படும் வேளாண் கூட்டுறவு மையத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய யூரியா, டி.ஏ.பி. உரங்கள், டிஎன்பிஎல் நிறுவனத்திற்கு முறைகேடாக விற்கப்பட்டு, அந்தத் தொகை தனி வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவதாகவும், கூட்டுறவு மையத்தின் விலைக்கு அங்கு வரவு வைக்கப்பட்டு, மீதிப் பணம் கொள்ளையடிக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து கரூர் மாவட்ட ஆட்சியர், வேளாண் துறை அலுவலர்கள் ஆகியோரிடம் கேட்டபோது, பதில் கூற அவர்கள் மறுத்துவிட்டனர்.

எனினும், வேளாண் மையத்தின் தனி அலுவலர் பி. செல்லமுத்து ஆக.12-ல் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார் என்றும், துறை ரீதியான விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டுக்குப் பிறகே, வேளாண் அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் தற்போது வெளிவந்துள்ளது.

"விவசாயிகளுக்கு அரசின் மானிய விலையில் வழங்கப்படும் உரங்கள், வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக அந்தந்தக் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

இதில் சில குளறுபடிகளைச் செய்து, தனி வங்கிக் கணக்கு தொடங்கி, டிஎன்பிஎல் நிறுவனத்திற்கு உரங்கள் விற்கப்பட்டிருப்பது முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதில் கோடிக்கணக்கில் முறைகேடு நடந்திருப்பதாகவும், இதில் மேல் விசாரணை நடத்த ஏதுவாக தனி அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது' என்று வேளாண் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரம், அரசின் நிறுவனமான டிஎன்பிஎல் ஆலைக்கே அதிக விலைக்கு விற்கப்பட்டுள்ளது. இதில், டிஎன்பிஎல் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களுக்கு உள்ள தொடர்பு குறித்தும் துறை ரீதியான விசாரணை நடைபெறுகிறது.

**வண்ண மீன் வளர்ப்பு பயிலரங்கம் துணைவேந்தர் துவக்கி வைத்தார்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,02:40 IST

பரங்கிப்பேட்டை: பரங்கிப்பேட்டை கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையத்தில் வண்ண மீன் வளர்ப்பு மற்றும் உற்பத்தி குறித்த பயிற்சி முகாமை அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமநாதன் துவக்கி வைத்தார். மத்திய வேளாண் அமைச்சகத்தின் தேசிய மீன் அபிவிருத்தி வாரியம் நிதி உதவியுடன் கடல் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வணிகம் குறித்த பயிற்சி முகாம் பரங்கிப்பேட்டை கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையத்தில் நடந்தது. புல முதல்வர் பாலசுப்ரமணியன் வரவேற்று பயிற்சி திட்டத்தின் விளக்கத்தையும், பயனையும் எடுத்துக் கூறினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமநாதன் முகாமை துவக்கி வைத்து பயிற்சி கையேட்டினை வெளியிட்டார். முகாமின் நோக்கம் குறித்து நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அஜித்குமார் விளக்கினார். ஓய்வு பெற்ற மத்திய கடல் மீன் ஆராய்ச்சி மைய இயக் குனர்

தேவராஜ், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மாமன்ற உறுப்பினர் செயலாளர் வின்சென்ட் பேசினர். இந்தத் திட்டத்தில் பயிற்சி பெறுவதற்காக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையைச் சேர்ந்த 25 பயனாளிகள் பங்கேற்றனர். இணை ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் நன்றி கூறினார்.

**மக்காச்சோளம் விலை ஏறுமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,03:13 IST

நாமக்கல்: "தமிழகத்தில் மக்காச்சோளத்தின் விலை ஜூலை மாதத்தில் குவிண்டாலுக்கு 1,100 ரூபாயை தாண்டியுள்ளது' என, வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:உலக அளவில் 2009-10ம் ஆண்டு மக்காச்சோளம் உற்பத்தி 804 மில்லியன் டன்களாக இருக்கும் என சர்வதேச தானிய கழகம் கணித்துள்ளது. கடந்த ஆண்டு உற்பத்தியை விட இரண்டு சதவீதம் அதிகம். அதுபோல் மக்காச்சோளத்தின் தேவை 818 மில்லியன் டன்களாக இருக்கும் என கணிக்கிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 44 சதவீதம் அதிகம்.இந்தியாவில் கரீப் பருவத்தில் மக்காச்சோள சாகுபடி பபரப்பு 27.97 லட்சம் ஹெக்டேர்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த ஆண்டை விட 2.1 சதவீதம் குறைவு. மக்காச்சோளம் அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலங்களான உத்திரப் பிரதேசம், கர்நாடகம் மற்றும் மத்திய பிரதேசத்தின் சில பகுதிகளில் பருவமழை தாமதமாகப் பெய்ததே காரணம். ஆந்திரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்ரா ஆகிய மாநிலங்களில் மக்காச்சோளம் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக தெரிகிறது.தமிழகத்தில் மக்காச்சோளம் விலை ஜூலை மாதத்தில் குவிண்டாலுக்கு 1,100 ரூபாயை தாண்டியுள்ளது. அதனால், ஆடிப்பட்டத்தில் விதைத்து அக்டோபர், நவம்பர் மாதத்தில் சந்தைக்கு வரும் மக்காச்சோளத்துக்கு இதே விலையை விவசாயிகள்  எதிர்பார்த்துள்ளனர்.வர்த்தக தகவல்களின்படி மக்காச்சோளம் விலை, ஆகஸ்ட் மாதம் இறுதி வரை இதே நிலையில் இருக்கும். கர்நாடக மாநிலத்திலிருந்து சந்தைக்கு மக்காச்சோளம் வரும்வரை விலை நீடிக்கும். ஆகஸ்ட் மாதத்துக்கு பின், விலை சரியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச்சந்தை தகவல் மையம் மக்காச்சோளத்தின் விலையை முன்னறிப்பு செய்ய ஆய்வுகளை மேற்கொண்டது. உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனை கூட்டத்தில், கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய விலை நிலவரங்கள் ஆய்வு செய்யப்பட்டது.அதன்படி, ஆடியில் விதைக்கப்பட்டு அக்டோபர், டிசம்பர் மாதத்தில் சந்தைக்கு வரும் மக்காச்சோளம் விலை குவிண்டாலுக்கு 850 ரூபாய் முதல் 950 ரூபாய் வரை நிலவும் என கணிக்கப்பட்டுள்ளது. கோழித்தீவன தேவை அதிகரிப்பு மற்றும் கரீப் பருவத்தில் சாகுபடி பரப்பளவு குறைவு போன்ற காரணங்களால் மக்காச்சோளம் விலை ஏறுமுகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.எனவே, தமிழக விவசாயிகள் எதிர்வரும் பட்டத்தில் மக்காச்சோளம்

சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகின்றனர். நல்ல விலை கிடைக்க பெரிய மணிகள் உள்ள ரகங்களை பயிரிட வேண்டும். 100 கிராம் மக்காச்சோளத்தில் 350க்கும் குறைவான மணிகள் இருந்தால் விவசாயிகள் நல்ல விலை பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் மீன் வளர்க்க மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,22:29 IST

சிவகங்கை:திருப்புவனம் ஒன்றியம் கிருதுமால் வடிநில பகுதி விவசாயிகளுக்கு மீன் வளர்க்க நூறு சதவீத மானியம் வழங்கப்படுகிறது. அலங்கார மீன் வளர்க்க, 2 லட்ச ரூபாய் மானியம் வழங்கப்படும். தகுதி: ஒரு ஏக்கர் நிலம், நீர், மின்சார வசதி, மீன் வளர்ப்பில் முன் அனுபவம் இருக்கவேண்டும். மீன் குஞ்சு வளர்க்க ஒரு இடத்திற்கு 4 லட்சம், ஒன்றரை ஏக்கர் நிலம், நீர், மின்சார வசதி, மீன் வளர்ப்பில் முன் அனுபவம் தேவை. பண்ணை குட்டைகளில் மீன் வளர்க்க, 20 இடங்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் மானியம், விவசாய பொறியியல் துறை மூலம் பண்ணை குட்டை அமைத்திருக்க வேண்டும்.

வலை கூண்டுகளில் மீன்வளர்க்க, ஐந்து இடங்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் மானியம் தரப்படும். சுமார் எட்டு மாதம், நீர் இருப்புக்காலம் கொண்ட ஊரணிகளுக்கு அருகில் வசிக்கவேண்டும். இதில், தேர்வு செய்யப்படுவோருக்கு பயிற்சிதரப்படும். விபரங்களுக்கு, மீன் வளத்துறை உதவி இயக்குனர் அலுவலகம், (உள் நாட்டு மீன்வளம்) 3/385, காஞ்சிரங்கால், சிவகங்கை' என்ற முகவரி, 04575 - 240 848' என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**செங்குடியில் விவசாயிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,23:31 IST

ஆர்.எஸ்.மங்கலம்:ஆர்.எஸ்.மங்கலம் செங்குடியில் ஆத்மா திட்டத்தில் முன்பருவ முனைப்பு இயக்கம் மற்றும் விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் சூசை தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் முகமது அப்துல் நசீர் வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குனர் சத்தியமூர்த்தி, வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்)சக்திமோகன் உட்பட பலர் பேசினர்.

பரமக்குடி நடமாடும் மண் ஆய்வகம் சார்பில் 65மண் மாதிரிகள் 12 தண்ணீர் மாதிரிகள் ஆய்வு செய்து மண்வள அட்டை வழங்கினர். உதவி வேளாண்மை அலுவலர்கள் நாகேஸவரி,மற்றும் சண்முகவேல் விவசாயிகளுக்கு நெல் விதை தேர்வு, ஊட்டமேற்றிய தொழு உரம் தயார் செய்தல் குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

**2011ல்665 மெ., டன் சான்று விதை உற்பத்தி செய்ய திட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2010,23:15 IST

ராமநாதபுரம்:2010-11ம் ஆண்டில் விதைப்பண்ணை மூலம் 665 மெகா டன் சான்று விதைகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. புறத்தூய்மை, இனத் தூய்மை உடைய மற்றும் நோய் தாக்குதல் இல்லாத விதைகளே சான்று விதைகள் ஆகும். இதை போதிய ஈரப்பதம் கொண்டதுடன், நல்ல முளைப்பு திறனுடன் அதிக மகசூல் தருபவை. மாவட்டத்தில் நெல், சிறுதானியம், பயறு வகைகள், எண்ணெய் வித்துப்பயிர்கள் சாகுபடி செய்ய புரட்டாசி பட்டம் ஏற்றதாகும்.

இதற்காக அறிவிக்கப்பட்ட ரகங்கள், சான்றளிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. விதைப் பண்ணை அமைக்கும் உற்பத்தியாளர்கள் தங்கள் பகுதிக்கு ஏற்ற பயிர் மற்றும் ரகங்களை தேர்வு செய்து அதற்கான ஆதார நிலை விதைகளை அரசு வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் பெறலாம். அதைக் கொண்டு விதைப்பண்ணை அமைத்து உரிய காலத்துக்கு பதிவு செய்து சான்று விதை உற்பத்தி செய்ய வலியுறுத்தப் பட்டுள்ளது. மாவட்டத்தில் அதிக சாகுபடி செய்யப் படும் ஏ.டி.டீ 39, 43, ஆர்.45, பி.பி.டி 5204, ஜே.ஜி. எல். 1798 நெல் ரகங்களும், சிறுதானியப் பயிரான ஜி.பி.யு.28 ரக கேழ்வரகு ஆதார விதைகள் போதுமான அளவு இருப்பு வைக்கப் பட்டுள்ளது. விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் மானிய விலையில் ஆதார விதைகள் வாங்கி பயனடையலாம். 2010-11ம் ஆண்டில் விதைப்பண்ணை மூலம் 665 மெகா டன் சான்று விதைகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விதைச்சான்று உதவி இயக்குனர் கனகராசன் இத்தகவலை தெரிவித்தார்.

**கொட்டில் முறை வெள்ளாடு வளர்ப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,02:22 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அடுத்த கொண்டேகவுண்டன்பாளையம் உழவர் மன்றம் சார்பில் "கொட்டில் முறை வெள்ளாடு வளர்ப்பு' குறித்து சிறப்பு முகாம் நடந்தது.சரவணம்பட்டி கால்நடை வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய இணைபேராசிரியர் ஆறுமுகம், பேசும் போது, விவசாயிகள் விவசாய தொழிலுடன் கோழி வளர்ப்பு, பால் பண்ணை போன்று ஆடு வளர்ப்பு தொழிலிலும்

ஈடுபடலாம். இதன் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும். எதிர்காலத்தில், ஆட்டிறைச்சிக்கு சந்தையில் சிறந்த வாய்ப்புள்ளது' என்றார். முகாமில், ஆடு வளர்ப்பு முறை, தீவனம் மற்றும் நோய் தடுப்பு, கொட்டில் கொட்டகை அமைப்பு முறை ஆகியவை குறித்து விளக்கப்பட்டது.
உழவர் மன்ற அமைப்பாளர் முத்துமாணிக்கம், செயலாளர் குருசங்கர், தலைவர் செந்தில்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**நெகமத்தில் கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,02:23 IST

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 36 ரூபாய் விலை கிடைத்தது.

நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 6 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 18 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் மூன்று வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.

முதல் தர கொப்பரை 7 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 32.10 ரூபாய் முதல், அதிகபட்சம் 36 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 11 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 25.20 ரூபாய் முதல், அதிகபட்சம் 32 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "நெகமம் பகுதியில் கடந்த இரண்டு வாரமாக ஏலத்திற்கு கொப்பரை வரத்து இல்லாமல் இருந்தது. இந்த வாரம் வரத்து ஓரளவுக்கு இருந்ததால் ஏலம் நடத்தப்பட்டது. வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை உயர்ந்து வருவதால், ஏலத்தில் முதல் தர கொப்பரைக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு 36 ரூபாய் விலை கிடைத்துள்ளது. அடுத்த வார ஏலத்திற்கு கொப்பரை வரத்து அதிகரிக்கும் என்று எதிர்ப்பாக்கப்படுகிறது' என்றனர்.

**விவசாயிகள் சங்க ஆர்ப்பாட்டம்**

பதிவுசெய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,02:39 IST

அரியலூர்: அரியலூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் நடத்திய கண்டன ஆர்பாட்டம் நடந்தது.ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா, இரண்டு ஏக்கர் இலவச நிலம் வழங்க வேண்டும். டீஸல், காஸ், மண்ணெண்ணெய், விலை உயர்வை வாபஸ் பெற வேண்டும். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அரியலூர் பாதாள சாக்கடை திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும்.அரியலூர் ரயில்வே

மேம்பாலம் பணியை விரைந்து முடிக்க வேண்டும். அரியலூர் நகராட்சியில் கூடுதல் துப்புரவு பணியாளர்களை நியமிக்க வேண்டும்.
அரியலூர் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த வேண்டும். அரியலூர்-தஞ்சாவூர் மார்க்கத்தில் கூட்ட நெரிசலை தவிர்க்க தொடர் பஸ் இயக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அரியலூர் தாலுகா அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணை தலைவர் பிச்சைபிள்ளை தலைமையில் ஆர்பாட்டம் நடந்தது.தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணை தலைவர் நாராயணன் பேசிய இந்த கண்டன ஆர்பாட்டத்தில், விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் செல்லதுரை, மாவட்ட துணை செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட தலைவர் மகாராஜன், கட்டுமான தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் துரைசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் தமிழரசி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மும்பையில் 27ல் பருத்தி ஆலோசனை குழு கூடுகிறது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,01:47 IST

திருப்பூர் : பருத்தி அறுவடை துவங்க உள்ள நிலையில், பருத்தி மேலாண்மை குறித்து முடிவு செய்வதற்கான ஆலோசனை கூட்டம், மும்பையில் உள்ள டெக்ஸ்டைல்ஸ் கமிஷனர் அலுவலகத்தில் வரும் 27ம் தேதி நடக்கிறது.

உலக அளவில் பருத்தி அதிகம் விளையும் நாடுகள் பட்டியலில், இந்தியா முக்கிய இடத்தை பெற்றுள்ளது. கடந்தாண்டில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக விளைச்சல் அதிகமாக இருந்தது. நடப்பாண்டிலும், அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளதால், வரத்தும் அதிகமாக இருக்குமென விவசாயத்துறை அமைச்சகம் கணித்துள்ளது.

விவசாயிகள் பெயரைக்கூறி பருத்தியை ஏற்றுமதி செய்து, வடமாநிலங்களில் உள்ள முக்கியஸ்தர்கள் ஆதாயம் பெறுகின்றனர். உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது, அதிகமாக பருத்தி விளையும் இந்தியாவில் மட்டுமே பருத்திக்கு அதிகப்படியான தட்டுப்பாடு ஏற்படுகிறது.செப்டம்பர் இறுதியில் இருந்து பருத்தி அறுவடை துவங்குகிறது. கடந்தாண்டில், அபரிமிதமான பருத்தி ஏற்றுமதி காரணமாக, பஞ்சு, நூல் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இதனால், விசைத்தறி, பின்னலாடை என அனைத்து வர்த்தகமும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

பருத்தி அறுவடை துவங்கப்பட உள்ள நேரத்தில், தேசிய பருத்தி ஆலோசனைக்குழு வரும் 27ம் தேதி மும்பையில் உள்ள ஜவுளித்துறை கமிஷனர் அலுவலகத்தில் கூடுகிறது. கடந்தாண்டு, பருத்தி ஏற்றுமதியில் அளவுக்கு அதிகமான சலுகை வழங்கப்பட்டதால், இந்திய ஜவுளி வர்த்தகம் தள்ளாடியது. திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதியாளர்களும், தேசிய பருத்தி ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

பருத்தி ஆலோசனைக்குழு உறுப்பினர் ராஜாசண்முகம் கூறுகையில்,""திருப்பூர் மற்றும் கோவையில் உள்ள நூற்பாலைகள் மற்றும் பின்னலாடை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. கடந்தாண்டு ஏற்பட்ட பிரச்னையே இதுவரை தீரவில்லை. எனவே, உள்நாட்டு தேவை பூர்த்தியான பிறகே, ஏற்றுமதிக்கு அனுமதிக்க வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்படும்," என்றார்.ரூ.32,600க்கு பதிவாகிறது!

"" போட்டி நாடுகளில் பெய்த கனமழையால், பருத்தி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்திய பருத்தியை மட்டுமே அந்நாட்டு நிறுவனங்கள் நம்பியுள்ளன. இந்தியாவில் மீண்டும் பருத்தி ஏற்றுமதிக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளதால், வெளிநாடுகள் கூடுதல் விலை கொடுத்தும் இறக்குமதி செய்ய தயாராகி விட்டன.

""தற்போதைய நிலவரப்படி, 30 ஆயிரம் ரூபாய் வரை விற் பனையான ஒரு கேண்டி பஞ்சு, 32 ஆயிரத்து 600க்குபதிவு செய்யப்பட்டு வருகிறது. இதனால், உள்நாட்டில் மீண்டும் பருத்தி விலை அளவுக்கு அதிகமாக உயரும் அபாயம் உள்ளது. எனவே, தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை வேண்டும்," என திருப்பூர் சைமா தலைவர் ஈஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

**கர்நாடகா மக்காச்சோளம் வரத்து துவக்கம்; விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,01:42 IST

உடுமலை : பல மாதங்களுக்கு பிறகு மக்காச்சோளத்திற்கு விலை உயர்ந்த நிலையில், கர்நாடகா மக்காச்சோளம் வரத்து துவங்கியுள்ளது. இதனால், இருப்பு வைத்த விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் மக்காச்சோள உற்பத்தியில் கோவை, திருப்பூர் மாவட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கடந்தாண்டு நவம்பரில் பி.ஏ.பி., மற்றும் இறவை பாசனத்தில் உடுமலை பகுதியில் அதிகளவு மக்காச்சோளம் பயிரிடப்பட்டது. அறுவடை சீசன் ஜனவரி மாத இறுதியில் துவங்கி பிப்ரவரி மாதத்தில் முடிந்தது. அறுவடை சீசனில் வரத்து அதிகரித்ததுடன், கோழிப்பண்ணை

நிறுவனங்களும் கொள்முதலை குறைத்ததால் விலை உயரவில்லை. இதனால், மூட்டை 800 ரூபாயிலிருந்து 850 ரூபாய் வரையே கொள்முதல் செய்யப்பட்டது.விளைச்சல் குறைந்து, சாகுபடி செலவு பல மடங்கு உயர்ந்த நிலையில் மக்காச்சோளத்திற்கு விலை கிடைக்காததால் விவசாயிகள் இருப்பு வைக்க ஆர்வம் காட்டினர். ஒழுங்குமுறை விற்பனை கூட குடோன்கள் நிரம்பி, விளைநிலங்களிலும் விவசாயிகள் மக்காச்சோளத்தை இருப்பு வைத்தனர்.

இம்மாத துவக்கத்தில் தேவை அதிகரித்ததால் விலை உயர்ந்தது. ஒரே வாரத்தில், மூட்டைக்கு ஆயிரத்து 100 ரூபாய் வரை விலை கிடைத்தது. இந்நிலையில், நேற்று ஆயிரத்து 50 ரூபாய்க்கு மக்காச்சோளம் கொள்முதல் செய்யப்பட்டது. கர்நாடகா மாநிலத்தில் இருந்து மக்காச்சோள வரத்து துவங்கியுள்ளதால் விலை சரிவு ஏற்பட்டு வருகிறது. அந்த மாநிலத்தில் இருந்து வரத்து மேலும் அதிகரித் தால், விலை பல மடங்கு சரிவடையும் வாய்ப்புள்ளது. தமிழகத்தில் நல்ல விலை கிடைப்பதால் அறுவடை செய்த ஈரப்பதமான மக்காச்சோளம் கர்நாடகாவிலிருந்து கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது விலை அதிகரித்த நிலையில், கர்நாடகா மக்காச்சோளம் வரத்தால் விலையில் ஏற்பட்டுள்ள சரிவு விவசாயிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. வேளாண் விற்பனை வாரிய அதிகாரிகள் கூறுகையில், "கர்நாடகா மாநிலத்திலிருந்து வரத்து துவங்கியுள்ளதால் மக்காச்சோள விலை குறையும். தற்போது, மூட்டை ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலை இருப்பதால் இருப்பு வைத்த விவசாயிகள் இந்த விலையை பயன்படுத்தி விற்று கொள்ளலாம்', என்றனர்.

**இயற்கை வேளாண்மையில் கத்தரி சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,00:00 IST



பாதிக்கப்பட்ட கத்தரி காய்கள்

காய்களில் சேதம் விளைவிக்கும் காய்த்துளைப்பான்

காய்கறி சாகுபடியில் இயற்கை முறை நுட்பங்களை கடைபிடித்தல்: தற்போது நாம் செய்யும் காய்கறி சாகுபடியில் முக்கியமானது கத்தரி சாகுபடி. இது பூச்சிகளால் கடுமையாக பாதிக்கப்படுகின்றது. இயற்கை சம்பந்தமான உரங்கள் மற்றும் நுண்ணுயிர்கள் கத்தரி சாகுபடிக்கு எப்படி உதவுகின்றது என்பதை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

இயற்கை முறை சாகுபடி: சாகுபடிக்கு முதலில் தேவைப்படுவது நாற்றங்கால். இதன் பரப்பு 25 அடிநீளம், 4 அடி அகலம், 4 அங்குலம் உயரம் கொண்டதாக இருக்க வேண்டும். நாற்றங்காலுக்கு 500 கிலோ நன்கு மக்கிய தொழு<உரம் இடவேண்டும். இதோடு இயற்கை உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா இவைகளை ஒரு கிலோ வீதம் போடவேண்டும். காய்கறி செடிகளில் தோன்றும் மிகக்கொடிய வாடல் நோயினைக் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடி என்னும் இயற்கை சம்மந்தப்பட்ட பூசணக் கொல்லி ஒரு கிலோ அளவினை நாற்றங் காலுக்கு இட்டு மண்ணினை நன்கு கொத்திவிட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 200 கிராம் விதை விதைக்க வேண்டும். நாற்றங்காலைத் தொடர்ந்து நடவு வயல் தயாரிப்பதற்கு நல்ல கவனம் தரவேண்டும். நடவு வயலில் நல்ல வடிகால் வசதி உண்டாவதற்காக உளி கலப்பை கொண்டு உழவேண்டும். பிறகு நன்கு மக்கிய தொழு உரம் 15 டன் போட்டு நிலத்தை உழுது பார்சால் போடவேண்டும். (இரண்டரை து 2 அடி) நாற்றங்காலில் இருந்து நல்ல திடமான 28 நாள் வயதுடைய நாற்றினை எடுத்து நடவு வயலில் நடவேண்டும். (பாருக்கு பார் இரண்டரை அடி, செடிக்கு செடி 2 அடி). நடவு நட்ட 21, 42, 63, 84 ஆகிய நாட்களில் ஒவ்வொரு முறையும் ஒரு டன் மக்கிய தொழு உரம், ஒரு கிலோ பாஸ்போபேக்டீரியா, ஒரு கிலோ டிரைகோடெர்மா விரிடி இவைகளைக் கலந்து வயலில் இட்டு பாசனம் செய்ய வேண்டும். செடிகளுக்கு கவனமாக பயிர் பாதுகாப்பு செய்ய வேண்டும். நடவு நட்ட மூன்று வாரம் கழித்து மாதம் இருமுறை உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகளான பவேரியா, பாசியானாவை ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று மில்லி அளவு கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தானது செடிகளைத் தாக்கும் காய்ப்புழுக்களுக்கு வியாதியை உண்டாக்கி கடுவிரைவில் அவைகளை மடியச் செய்துவிடுகின்றது. இதைத் தொடர்ந்து இலைகளுக்கும் தண்டுகளுக்கும் பூக்களுக்கும் ஏற்படும் பூச்சிகளின் சேதத்தைத் தவிர்க்க வாரம் ஒரு முறை பைட்டோபிராட் என்னும் இயற்கை பூச்சி விரட்டியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி அளவு கலந்து தெளிக்கவும். இந்த இரண்டு இயற்கை மருந்துகளும் வெகு சிறப்பாக செயல்பட்டு விவசாயிகள் விஷ மருந்துகளை உபயோகிப்பதிலிருந்து காப்பாற்றுகின்றன. வளரும் செடிகளுக்கு காலத்தில் பாசனம் செய்ய வேண்டும். இயற்கை முறையை அனுசரிக்கும்போது பாசன செலவில் மிச்சம் ஏற்படும். பாசன நீர் கிரகிக்கப்பட்டு பூமி உலர்ந்தவுடன் ஆட்களை வைத்து கத்தரி செடிகØ சுற்றி பூமியைத் தளர கொத்திவிட வேண்டும். உடனே மக்கிய தொழு உரத்தை பூமிக்கு இட்டு பாசனம் செய்யலாம். விவசாயிகள் தாங்கள் சேகரித்துள்ள தொழு உரத்தை அவ்வப்போது மேலே விவரித்தபடி செடிகளுக்கு இட்டுவர

வேண்டும். இதனால் செடிகள் வெகு செழிப்பாக வளர்ந்து வருகின்றன. மேற்கண்ட பணிகளை கவனத்தோடும் நம்பிக்கையோடும் செய்யும்போது கத்தரி செடிகள் நட்ட 75வது நாளிலிருந்து 120 நாட்கள் வரை அறுவடை கொடுத்துக் கொண்டிருக்கும். ஒரு ஏக்கரில் 65 கிலோ கொண்ட மூடை 135 கிடைக்கும். இயற்கை முறை சாகுபடியில் ஏக்கருக்கு ஆகும் செலவு ரூ.22 ஆயிரம் ஆகும். காய்கள் விற்பனையில் வரவு ரூ.68 ஆயிரம் கிடைக்கும். சாகுபடி செலவு போக ஏக்கரில் நிகர லபாம் ரூ.46 ஆயிரம் கிடைக்கும்.

ரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்து அடிக்கும் சாகுபடி முறையில் சாகுபடி செலவு அதிகரித்துக்கொண்டே வரும். ஆனால் கத்தரி மகசூல் அதிகரிக்காது. இயற்கை முறை சாகுபடி தொடர்ந்து செய்யும்போது சாகுபடி செலவு படிப்படியாக குறைந்துவிடும். ஆனால் கத்தரி மகசூல் அதிகரிக்கும். இதனால் சாகுபடியில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும். இனி எதிர்காலத்தில் நீண்டகால சாகுபடிக்கு இயற்கை முறை சாகுபடிதான் ஏற்றது. அந்த இயற்கை முறை சாகுபடிக்கு சக்தியைக் கொடுப்பது நுண்ணுயிர்களும் உ<யிர் உரங்களும் ஆகும்.

-எஸ்.எஸ்.நாகராஜன்.

**தென்னை, பனைமரம் ஏற உதவும் கருவி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,00:00 IST



உயரமாக வளரும் அல்லது வளர்த்தக் கூடிய பனை, தென்னை, தேக்கு, குமிழ், மலைவேம்பு மற்றும் தேயிலை தோட்ட மரமான சில்வர் ஓக் மரங்களில் அறுவடை, பராமரிப்பு சமயங்களில் மரம் ஏறி வேலை செய்ய ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதால் விவசாயிகள், மரம் வளர்ப்போர் பெரிதும் சிரமப் படுகின்றனர். கால் மற்றும் இடுப்பில் கயிற்றை இணைத்து மரத்தோடு நெஞ்சை உரசியபடி கைகளால் மரத்தை கட்டிப்பிடித்து உடலை வருத்திக்கொண்டுதான் மரம் ஏற வேண்டும் என்பதால் மரம் ஏறி பழக யாரும் முன்வருவதில்லை. அதிலும் பாதுகாப்பின்மை பயமும் கூட.

இந்நிலை மாற உருவானதுதான் Multi Tree Climber. பாதையில் நடப்பதைவிட பாதுகாப்பானது. இக்கருவியின் உதவியுடன் பழக்கமில்லாதவர்கள், பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள் என அனைத்து தரப்பினராலும் மரம் ஏறமுடியும். தனிநபர் வேலைவாய்ப்பின் மூலம் பொருளாதாரம் மேம்படையச் செய்யும் வகையில் கருவியின் முக்கிய பாகங்கள் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் என்ற சதுர வடிவ எக்கு குழாயினால் பிரத்யேகமாக தயாரிக்கப் பட்டுள்ளது. மரத்தில் இரும்பு பாகங்கள் படும் பகுதியில் மரங்களுக்கு சேதம் ஏற்படா வண்ணம் ரப்பர் உருளைகள் பொருத்தப் பட்டுள்ளது. குறைந்த எடை எங்கும் எடுத்துச்செல்ல எளிது. மரத்தின் சுற்றளவிற்கேற்ப கருவியில் இருந்தவாறே சரிசெய்யும் வசதி, மரத்தின் உச்சியில் நிறுத்திவிட்டு மட்டையின் மீதேறிச் செல்லவும். சுற்றி வந்து காய் பறிக்கவும், கிளைகளை வெட்டவும் முடியும். இக்கருவி அதிக பட்சமாக 70 கிலோ எடையை தாங்கவல்லது. பராமரிப்பு செலவு ஏதுமின்றி மேற்கூறிய அனைத்து மரங்களிலும் ஏறி இறங்க இக்கருவி ஒன்றே போதுமென்பது தனிச்சிறப்பாகும்.

**கருவி பற்றிய செயல்முறை விளக்கம்**

மரம் ஏறுபவர் பாதுகாப்பு கச்சையை உடலில் அணிந்துகொள்ளவும். முதலில் கீழ்ப்பகுதியை அடுத்து மேல்பகுதியை மரத்தில் சரியாகப் பொருத்தவும். இணைப்பு கச்சையால் இணைக்கவும். கால்வைக்கும் பகுதியில் ஏறி நின்று இரு கைகளாலும் மேல்பகுதியை மேல் நோக்கியவாறு எடுத்து மரத்துடன் சற்று சாய்ந்த நிலையில் வைத்து பின் அமரவும். பாதுகாப்பு கச்சையின் மறு முனையை அதற்குரிய இடத்தில் பொருத்தவும். மேல் மற்றும் கீழ்ப்பகுதியின் இணைப்பு கச்சையை மரம் ஏறுபவரின் கால்களின் உயரத்திற்கேற்ப சரிசெய்து கொள்ளவும். தயார் நிலையில் அனைத்தையும் சரிபார்க்கவும். கருவியில் அமர்ந்த நிலையில் கீழ்ப்பகுதியை மேல்

நோக்கியவாறு கால்களின் உதவியோடு சரிசமமாக எடுத்துவைத்த நிலையில் சற்றே அழுத்தியவாறு எழுந்து நிற்கவும். 3ம் நிலை மற்றும் 7ம் நிலையில் கூறியுள்ளபடி மாற்றி மாற்றி செய்யும்போது மரம் ஏற ஏதுவாகிறது. இறங்க வேண்டுமென்றால் கீழ்நோக்கியவாறு எடுத்து வைத்து வரவேண்டும். மரத்தின் சுற்றளவிற்கேற்ப / பிடிமானத்திற்கேற்ப / மரத்தின் மீது சுற்றி வர / நிறுத்தி வைக்க கீழ்க்கண்டபடி செய்யவும்.

கீழ்ப்பகுதியில் நின்றவாறே மேல்பகுதியை சமமாக வைத்த நிலையில் நீட்ட, குறைக்க அல்லது நிறுத்திவைக்க அதற்குண்டான பாகங்களை பயன்படுத்திக் கொள்ளவும். மேல்பகுதியில் அமர்ந்தவாறே கீழ்ப்பகுதியை சமமாக வைத்த நிலையில் நீட்ட, குறைக்க அல்லது நிறுத்தி வைக்க அதற்குண்டான பாகங்களை பயன்படுத்திக் கொள்ளவும். **தொடர்புக்கு: வெங்கட், 0 99442 84440. கே.சத்தியபிரபா, 94865 85997, 97501 20222**

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,00:00 IST



ஐ.சி.ஆர்.ஐ.5 புது ஏல ரகம்: ஸ்பைசஸ் போர்டின் இந்திய ஏலக்காய் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப் பட்டுள்ளது. இடுக்கி மாவட்டத்தில் 200 ஏல விவசாயிகளிடம் 50 தட்டைகள் வீதம் வழங்கப்பட்டு பரிசோதிக்கப் பட்டது. வாகமன் கிராமத்தைச் சேர்ந்த ஜோசப் வர்கீஸ் என்ற ஏல விவசாயி மேற்கொண்ட சாகுபடி நுட்பங்கள் அமோக விளைச்சலுக்கு அடிகோலியுள்ளது. ஒரு தூருக்கு 90 தட்டைகள் வீதம் வளர்ந்து நிற்கிறது இந்த புதிய ரகம். சரங்களில் 35 முதல் 50

கொத்துக்கள் உள்ளன. ஒவ்வொரு கொத்திலும் 3 முதல் 5 பூக்கள் உள்ளன. உருவாகும் காய்கள் 9 எம்எம் அளவில் இளம்பச்சை நிறத்தில் உள்ளன. நல்ல திரட்சியுடன் உள்ள ஏலக்காய்கள் விற்பனையின்போது நல்ல விலைக்கு போகின்றன.

நல்லாணி ரகத்துடன் ஒப்பிடும்போது இதில் துளைப்பான்கள் தாக்குதல் வெகு குறைவாகவே இருப்பதால் பூச்சி மருந்து பிரயோகம் குறைவாக உள்ளது. ஜோசப் தனது தோட்டத்தில் முழுவதுமாக ஐ.சி.ஆர்.ஐ.5 ரகத்தை பயிரிடத் தொடங்கிவிட்டார். இதற்கென ஒரு நாற்றுப்பண்ணையையும் தொடங்கி, சக விவசாயிகளுக்கு ஏலத்தட்டைகளை வழங்கி வருகிறார். (தகவல்: விஜேஸ்னா, வி, கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு, ஏலப்பாறை).

உழவர்களுக்கு இளநிலைப் பட்டம் (பி.எப்.டெக்)., படிப்பை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உழவர்களுக் கென்று முதன் முதலாக துவங்கிஉள்ளது. உலகிலேயே இது ஒரு முன்னோடி திட்டம். பல்கலைக் கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம், கோயம்புத்தூர்-641 003 மூலம் இந்த ஆண்டு அறிமுகப் படுத்தியுள்ளது.

**சிறப்பு அம்சங்கள்**

* இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப பட்டப்படிப்பின் வழியாக உழவர்கள் சுயதொழில் முனைவராகலாம்.

* அனுபவம் வாய்ந்த வேளாண் விஞ்ஞானிகள் மூலம் வடிவமைக்கப்பட்ட பயிற்சி புத்தகங்கள் வழங்கப்படும்.

* நிலத்தினை பண்படுத்துதல் முதல் அறுவடை வரையும் தானியங்களை சேமித்தல், பதப்படுத்துதல் மற்றும் மதிப்பூட்டுதல் வரை அனைத்து தொழில்நுட்பங்களையும் அறிந்துகொள்ளலாம்.

* தொழில்நுட்பங்களுக்கான செயல்முறை விளக்கங்கள் நேர்முகப் பயிற்சி வழியாக எளிய முறையில்நடத்தப்பட உள்ளது.

* இப்பட்டப்படிப்பு எளியமுறையில் தமிழில் பயிற்றுவிக்கப்பட உள்ளது.

* பருவமுறையில் (செமஸ்டர் சிஸ்டம்) 3 ஆண்டுகளுக்கு 6 பருவங்களில் பாடங்கள் நடத்தப்பட உள்ளன.

தகுதிகள்: உலகிலேயே முதன்முறையாக வேளாண் மக்களுக்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப பட்டப்படிப்பில் 10ம் வகுப்பு படித்த 30 வயது நிரம்பிய அனைவரும் சேர்ந்து பயன்பெறலாம். உழவர்கள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி வேளாண்மை மற்றும் அறிவியல் அடிப்படையில் இப்பட்டப்படிப்பின்மூலம் அறிந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு "இயக்குனர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. 0422-661 1229, 94421 11047, 94421 11048, மின்அ ஞ்சல்: odl@tnau.ac.inஇணையதளம்: www.tnau.ac.in.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

***பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 24% அதிகரிப்பு***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு கரீஃப் பருவத்தில், ஆகஸ்டு 12-ந் தேதி வரையிலான காலத்தில், பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு, சென்ற பருவத்தின் இதே காலத்தைக் காட்டிலும் 24 சதவீதம் அதிகரித்து 1.03 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

சென்ற கரீஃப் பருவத்தின் இதே காலத்தில், நெல் சாகுபடி பரப்பளவு 2.51 கோடி ஹெக்டேராக இருந்தது. இது, தற்போது 9.08 சதவீதம் அதிகரித்து 2.74 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட சிறு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு 11.49 சதவீதம் உயர்ந்து 1.94 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதில், கம்பு சாகுபடி பரப்பளவு 20.63 சதவீதம் உயர்ந்து 81.20 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

தென் மேற்கு பருவமழை நன்றாக உள்ளதால், நடப்பு கரீஃப் பருவத்தில், அனைத்து வகையான பயிர்கள் பயிரிடும் பரப்பளவு ஒட்டுமொத்தத்தில் 0.8 சதவீதம் உயர்ந்து 8.08 கோடி ஹெக்டேரிலிருந்து 8.89 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

## நடப்பு ஆண்டு ஜூலை மாதத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி 7.78 லட்சம் டன்னாக அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் அதிகமாக இருப்பது மத்திய அரசுக்கு ஒரு பெரும் சவாலாக உள்ளது. இதனை எதிர்கொண்டு உள்நாட்டில் உணவு தானியங்கள், பருப்பு வகைகள் போன்றவை தங்கு தடையின்றி கிடைக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சமையல் எண்ணெய் கையிருப்பை அதிகரிக்கும் வகையில், நடப்பு ஆண்டு ஜூலை

*மாதத்தில் 7.78 லட்சம் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.*

*இறக்குமதி*

*சென்ற ஆண்டின் இதே மாதத்தில் இது 5.57 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, சமையல் எண்ணெய் இறக்குமதி 40 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே மாதத்தில் பாமாயில் இறக்குமதி 16 சதவீதம் அதிகரித்து 4,99,880 டன்னாக உயர்ந்துள்ளது. சோயா எண்ணெய் இறக்குமதி இரண்டு மடங்கு அதிகரித்து 2.20 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பு எண்ணெய் பருவத்தின் முதல் ஒன்பது மாதங்களில் சமையல் எண்ணெய் இறக்குமதி 9,098 டன் அதிகரித்து 60.90 லட்சம் டன்னாக வளர்ச்சி அடைந்துள்ளது. எண்ணெய் பருவம் என்பது நவம்பர் மாதத்தில் தொடங்கி அக்டோபர் மாதத்தில் நிறைவடைகிறது.*

*நடப்பு ஆண்டு ஜூலை மாதத்தில் சமையல் அல்லாத, இதர பயன்பாட்டிற்கான எண்ணெய் இறக்குமதி 41 சதவீதம் குறைந்து 38,601 டன்னிலிருந்து 22,857 டன்னாக சரிவடைந்துள்ளது. நடப்பு எண்ணெய் பருவத்தின் முதல் ஒன்பது மாதங்களில் இதன் இறக்குமதி 2.83 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. சென்ற எண்ணெய் ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 13 சதவீதம் குறைந்துள்ளது.*

*தாவர எண்ணெய்*

*தாவர எண்ணெய் இறக்குமதி (சமையல் எண்ணெய் + சமையலுக்கு பயன்படாத எண்ணெய்) நடப்பு ஆண்டு ஜூலை மாதத்தில் சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 34 சதவீதம் (5.96 லட்சம் டன்) உயர்ந்து 8.01 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. முந்தைய ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது இதன் இறக்குமதி (7.32 லட்சம் டன்) 6.3 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த தகவலை எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*சென்ற ஜூலை மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி அதிகரித்துள்ள நிலையில், உள்நாட்டிலும் இதன் உற்பத்தியும் உயர்ந்துள்ளது. இதுபோன்ற காரணங்களால் சென்ற ஜூலை மாதத்தில் தாவர எண்ணெய் கையிருப்பு முந்தைய மாதத்தைக் காட்டிலும் 9.5 சதவீதம் உயர்ந்து 11.10 லட்சம் டன்னிலிருந்து 12.15 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.*

*நடப்பு எண்ணெய் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தாவர எண்ணெய் இறக்குமதி, சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 1 சதவீதம் குறைந்து 64.10 லட்சம் டன்னிலிருந்து 63.80 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.*

*சென்ற 2009–ஆம் எண்ணெய் பருவத்தில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி வியக்கத்தக்க வகையில் 86 லட்சம் டன்னாக உயர்ந்து இருந்தது. இது, நடப்பு 2010–11–ஆம் எண்ணெய் பருவத்தில் 90 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*பணவீக்க விகிதம்*

*இந்நிலையில் சென்ற ஜூலை 31–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 11.40 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் சென்ற ஜூலை மாதத்தில் 9.97 சதவீதமாக குறைந்துள்ளது.*

நடப்பு கரீஃப் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியும் அதிகரித்து வருவதால், வரும் மாதங்களில் பணவீக்க விகிதம் குறையும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

**அடுத்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முதலிடத்தை பிடிக்கும்**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இந்தியா, வரும் 2015–ஆம் ஆண்டிற்குள் பொருளாதார வளர்ச்சி வேகத்தில் உலக அளவில், சீனாவையும் விஞ்சி முதலிடத்தை பிடிக்கும் என மார்கன் ஸ்டான்லி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி

பொருளாதார வளர்ச்சி வேகத்தில், தற்போது சீனா முதலிடத்திலும், நம்நாடு இரண்டாவது இடத்திலும் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தி நம் நாட்டில் ஆண்டிற்கு சராசரியாக 7.1 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, சீனாவில் 9.1 சதவீதமாக உள்ளது.

இந்நிலையில் நம்நாட்டில் தொலை தொடர்புச் சேவை மோட்டார் வாகனங்கள் போன்ற பல்வேறு துறைகளில் அசுர வளர்ச்சி ஏற்பட்டு வருவதால், 2015–ஆம் ஆண்டிற்குள் நம்நாட்டின் பொருளாதாரத்தில் 9.5 சதவீதம் வளர்ச்சி ஏற்படும் என மார்கன் ஸ்டான்லி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின் வாயிலாக தெரிய வந்துள்ளது. அதேசமயம் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 2012–ஆம் ஆண்டிற்குள் 9 சதவீதமாகவும் 2015–ஆம் ஆண்டிற்குள் 8 சதவீதமாகவும் சரிவடையும் என ஆய்வின் வாயிலாக தெரிய வந்துள்ளது.

நடப்பு 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக சுமார் ரூ.23 லட்சம் கோடி (50,000 கோடி டாலர்) முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முதலீட்டை 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–17) ரூ.46 லட்சம் கோடியாக (1 லட்சம் கோடி டாலர்) உயர்த்த மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

பணியாளர்கள்

வரும் 2020–ஆம் ஆண்டிற்குள் இந்தியா தகுதியும் திறமையும் படைத்த 13.60 கோடி பணியாளர்களை கூடுதலாக உருவாக்கும். இது, ஜப்பான் நாட்டின் மக்கள் தொகைக்கு சமமாகும். இது, சீனாவில் 2.30 கோடியாக மட்டுமே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால் பொருளாதார வளர்ச்சி வேகத்தில் சீனாவை பின்னுக்கு தள்ளி இந்தியா முதலிடத்தை பிடிக்கும்.

## அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி 14% உயர்வு

நடப்பு நிதி ஆண்டின் முதல் இரண்டு (ஏப்ரல்–மே) மாதங்களில் உணவு தானியங்கள், பால் மற்றும் பால் பொருள்கள், பழங்கள், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள், இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 14.2 சதவீதம் (ரூ.8,760.39 கோடி) அதிகரித்து ரூ.10,007.30 கோடியாக உயர்ந்துள்ளது.

இவற்றுள் உணவு தானியங்கள் இறக்குமதி ரூ.1.22 கோடியிலிருந்து சுமார் 30 மடங்கு அதிகரித்து ரூ.31.28 கோடியாக உயர்ந்துள்ளது. பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி 580 சதவீதம் அதிகரித்து ரூ.30.08 கோடியிலிருந்து ரூ.204.65 கோடியாக வளர்ச்சி அடைந்துள்ளது. இதே மாதங்களில் பழங்கள் மற்றும் காய்கறிகள் இறக்குமதி 16.5 சதவீதம் உயர்ந்து ரூ.994.18 கோடியாக அதிகரித்துள்ளது.

மோட்டார் வாகனங்கள் மற்றும் ரப்பர் இறக்குமதி முறையே 131.6 சதவீதம் மற்றும் 83.4 சதவீதம் உயர்ந்துள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மாதங்களில் பருப்பு வகைகள் இறக்குமதி 42.9 சதவீதம் சரிவடைந்து ரூ.862.92 கோடியாகவும், தேயிலை மற்றும் காபி இறக்குமதி 15.8 சதவீதம் குறைந்து ரூ.33.25 கோடியாகவும் சரிவடைந்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நாட்டின் மொத்த இறக்குமதி ரூ.2,47,211 கோடியாக உயர்ந்தது. இதில் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி (ரூ.10,007.30 கோடி) அளவு 4 சதவீதமாகும். அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி அதிகரிப்பால் உள்நாட்டு நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பது குறித்து மத்திய அரசு கண்காணித்து வருகிறது.

தமிழ் கூடல்
10 வருட சேவையில்...

**சிறு, குறு விவசாயிகளுக்கு 5 ஆண்டுகளில் புதிய மோட்டார் வழங்கப்படும்: தமிழக அரசு**

சென்னை, ஆக. 17-

சிறு, குறு விவசாயிகளுக்கு 5 ஆண்டுகளில் புதிய மோட்டார் வழங்கப்படும் என்று தமிழக அரசு விளக்கமளித்துள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

விவசாய மின் இணைப்புகளில் பயன்படுத்தப்படும் திறன் குறைந்த பழைய மின் பம்ப் செட்டுகளை மாற்றி திறன்மிக்க புதிய பம்ப் செட்டுகள் வழங்குவது பற்றி அரசின் விளக்கம் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைச் சேமிக்கவும், பழைய திறன் குறைந்த பம்ப்செட்டுகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் மின் விரயத்தைக் குறைக்கவும், சிறு குறு விவசாயிகளுக்கு அத்தகைய பழைய திறன் குறைந்த பம்ப்செட்டுகளை மாற்றி புதிய திறன்கூடிய

அதே குதிரைத்திறன் கொண்ட பம்ப்செட்டுகள் இலவசமாக வழங்கப்படும் என்றும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்படும் என்றும் இந்த ஆண்டு ஆகஸ்ட் 15 சுதந்திர தின விழாவில் அறிவிப்பு முதல்- அமைச்சரால் வெளியிடப்பட்டது.

இதுகுறித்து ஓரிரு பத்திரிகைகள் இத்திட்டத்திற்கு கணிசமாக மானியத் தொகை ஆகும் என்றும், எனவே இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா என்றும், இதனால் மின் சேமிப்பு ஏற்படுமா என்றும் சில ஐயப்பாடுகளை எழுப்பியுள்ளன. இத்திட்டத்தைப் பற்றி முடிவு செய்யும்போதே, இத்திட்டத்தை எப்படி செயல்படுத்தலாம் என்றும், இதனால் ஏற்படும் மின் சேமிப்பை ஆய்வின் அடிப்படையில் தெரிந்து கொண்டும், அதன் அடிப்படையிலேயே அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்திட்டத்தை ஒரே ஆண்டில் செயல்படுத்துவது என்பது இயலாத காரியம் என்பதை இந்த அரசும் அறியும். ஏனெனில், இதற்குத் தேவைப்படும் பம்ப்செட்டுகளை ஒரே ஆண்டில் உற்பத்தி செய்து தரும் திறன் தொழிற்சாலைகளுக்கு இல்லை. எனவே, படிப்படியாக ஐந்து ஆண்டு காலத்தில் இந்தத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

மேலும், அந்தப் பத்திரிகைகள் குறிப்பிட்டதைப்போல, ஒரு பம்ப்செட்டுக்கு 40 ஆயிரம் ரூபாய் செலவு என்பது- விவசாயத்தில் 7.5 குதிரைத்திறனுக்கு மேல் நீர்மூழ்கி மோட்டார்களின் விலையின் அடிப்படையில் அந்தப்பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஆனால், உண்மை நிலை என்னவென்றால், டெல்டா பகுதிகளில் மட்டுமே நீர்மூழ்கி மோட்டார்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, 3.5 முதல் 5 குதிரைத்திறன் கொண்ட பம்ப்செட்டுகளே சிறு குறு விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்து கின்றனர். உதாரணமாக தமிழ் நாட்டிலுள்ள மொத்தம் 19 இலட்சம் இணைப்புகளில், சுமார் 15 இலட்சம் இணைப்புகள் 5 மற்றும் அதற்குக் குறைவான குதிரைத் திறனுள்ள பம்ப் செட்டுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு குறு விவசாயிகள் அனைவரும் இந்தப் பிரிவுக்குள்தான் வந்து விடுவார்கள். இவற்றின் விலை சராசரியாக ரூ.20 ஆயிரம் ஆகும். மேலும், அதிக அளவில் சாதாரண மோட்டார்களே சிறு குறு விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றின் விலை சுமார் ரூ.15 ஆயிரத்திற்குள்தான் இருக்கும். இத்திட்டத்தின் அறிவிப்பில் தெரிவித்தது போல், குறைந்தபட்சம் 20 சதவிகிதம் மின் சேமிப்பு இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இது அதிகபட்சம் 30 சதவிகிதம் வரை இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. புதிய பம்ப்செட்டுகள் வாங்கும்போது, இத்தகைய மின் சேமிப்பை ஏற்படுத்தும் தன்மை உள்ளனவா என்பதையும் பரிசோதித்து வாங்குவதுடன்,

அத்தகைய பம்ப் செட்களை வழங்கும் நிறுவனங்களே- அவற்றை பொருத்தி மின் சேமிப்பை செயல் முறையில் நிரூபித்துக்காட்டி, அதன் அடிப்படையிலேயே அவர்களுக்கு அதற்கான தொகை வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படவுள்ளது.

மேலும், இதுவரை அரசு மானியத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக ஆண்டுக்குப் பத்தாயிரம் இணைப்புகள் என்ற முறையில், 50 சதவிகித மானியத்தில், புதிய மோட்டார்களைப் பொருத்தும் எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு, நிகரமாக உள்ள சுமார் 14 லட்சம் இணைப்புகள் ஒவ்வொன்றும் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் குறு சிறு விவசாயிகள், மற்ற விவசாயிகள் எண்ணிக்கை, தற்போது அவர்கள் பயன்படுத்தி வரும் பம்ப் செட்டுகளினுடைய குதிரைத் திறன் மற்றும் நீர் இழுப்புத் திறன் ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு, திறன் குறைந்த இணைப்புகள் மட்டும் கணக்கில் எடுக்கப்பட்டு, அத்தகைய இணைப்புகளுக்கு மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதனால், இத்திட்டம் எப்படி செயல்படுத்தப்படும் என்பதை ஒருமுறைக்குப் பலமுறை விவாதிக்கப்பட்டு, உரிய வழி முறைகள் வகுக்கப்பட்டு, அதனடிப்படையிலே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அரசு பல்வேறு புதிய திட்டங்களை அறிவிக்கும்போது, இது செயல்படுத்த முடியுமா என்பது போன்ற வினாக்களை மிகுந்த அக்கறையுடன் பத்திரிகைகள் எழுப்புவதும், அத்தகைய திட்டங்களைத் திறம்பட திட்டமிட்டு இந்த அரசு செயல்படுத்தும்போது, அதே பத்திரிகைகள் பாராட்டியுள்ளதையும் அனைவரும் அறிவர். அதேபோல், இந்தத் திட்டத்தையும், அறிவிப்பு வெளியிட்டவாறு சிறு குறு விவசாயிகள் பயன்படத்தக்க வகையிலும், மின் சேமிப்பு ஏற்படும் வகையிலும் இந்த அரசு உறுதியாக நிறைவேற்றும்.

விவசாயப் பயன்பாட்டிற்கென இணைப்பு பெற்று- பிற பயன்பாட்டிற்கு அந்த மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் கண்காணிக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும். அதையே ஒரு காரணமாகக் கொண்டு, விவசாயத்திற்கு இலவச மின் மோட்டார்களை வழங்கினால், விவசாயிகள் அதைத் தவறாகப் பயன் படுத்துவார்கள் என்றும், மின்சாரத்தை விரயம் செய்து நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்துவிடுவார்கள் என்பதும் ஒரு பொருத்தமான வாதமாக ஏற்றுக் கொள்ள முடியாது. விவசாயிகள் பெரும்பாலும் தட்டுப்பாட்டோடு கிடைக்கின்ற நிலத்தடி நீரை, சிக்கனமாகப் பயன்படுத்துவார்களே தவிர,

இலவசமாக மின்சாரம் கிடைக்கின்றதே என்ற காரணத்தினால், நீரையும், மின்சாரத்தையும் விரயமாக்குகின்ற முயற்சியில் ஈடுபடமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

பல்வேறு சிரமங்களுக்கிடையில் விவசாய உற்பத்தியைச் செய்கின்ற விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் எல்லாம் உதவிக்கரம் நீட்ட வேண்டுமோ- அந்த வகையில் எல்லாம் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில்தான், 7000 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயக் கடன் தள்ளுபடி, வட்டியில்லாத பயிர்க்கடன், மானிய விலையில் தரமான விதை விற்பனை, மானியத்துடன் கூடிய சொட்டு நீர்ப்பாசனம், மானியத்தில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிர் சாகுபடி, மானியத்தில் உர விற்பனை என எண்ணற்ற சலுகைகளை விவசாயிகளின் நலன் கருதி செய்து வரும் இந்த அரசு, சிறு குறு விவசாயிகளால் கணிசமான தொகையை முதலீடு செய்து, இத்தகைய பழைய திறன் குறைந்த பம்ப்செட்டுகளை 50 சதவிகித மானியத்தில்கூட வாங்கி மாற்ற இயலாது என்பதை உணர்ந்து, இந்த நாட்டின் அச்சாணியாகத் திகழும் விவசாயிகளுக்கு மேலும் ஒரு சலுகையாக இந்தத் திட்டம் அமைய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதைக் குறை கூறுபவர்கள் கூறினாலும், இதனால் பயன்பெறும் விவசாயிகள்- குறிப்பாக சிறு குறு விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்பப்படுகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.